# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நிகழ்ச்சி நிரல்

<u>2026, ஜூன் 19, வெள்ளிக்கிழமை</u>

<u>ஆனி 5, திருவள்ளுவர் ஆண்டு – 2057</u>

<u>காலை 9.30 மணி</u>

### 1. இரங்கற் குறிப்புகள்

கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து:

(1) திரு. சி. இராமசுவாமி
(2) திரு. தா. வீராசாமி
(3) திரு. சி. சுவாமிநாதன்
(4) திரு. அ.க. ஆறுமுகம்
(5) திரு. பெ. கண்ணன்
(6) திரு. அ. நாஞ்சில் முருகேசன்

### 2. இரங்கல் தீர்மானங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைமுன் வைக்கும் இரங்கல் தீர்மானங்கள்:

(1) தோழர் திரு. நல்லகண்ணு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.

(2) திரு. சி.கு. இராமசாமி, சட்டமன்றப் பேரவை முன்னாள் செயலாளர் அவர்கள் மறைவு குறித்து.

(3) திரு. ஆர்.பி. சௌத்ரி, பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் அவர்கள் மறைவு குறித்து.

(4) திரு. கே. ராஜன், பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் அவர்கள் மறைவு குறித்து.

(5) திரு. பாரதிராஜா, பிரபல திரைப்பட இயக்குநர் அவர்கள் மறைவு குறித்து.

### 3. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன் கீழ் நியமனம் செய்த, மாற்றுத் தலைவர்கள் பட்டியலை பேரவைக்கு அறிவிப்பார்.

## 4. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு **திரு. கே.ஏ. செங்கோட்டையன்**, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர், கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவார்:–

"சட்டமன்றப் பேரவை விதி 13(2)–ன் கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை தள்ளிவைத்து, இன்று முன்மொழியப்பெறும் அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

## 5. அரசினர் தனித் தீர்மானம்

மாண்புமிகு **திரு. ச. ஜோசப் விஜய்**, முதலமைச்சர், கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவார்:–

"காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், மாண்பமை உச்ச நீதிமன்றம் 16.2.2018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவைப் பெறாமலும், ஒன்றிய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால், கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் எதிர்ப்பை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

கர்நாடக அரசின் மேகதாது அணைத் திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உட்பட எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

காவிரி நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றமும், காவிரிப்படுகை ஒரு பற்றாக்குறை படுகை எனக் குறிப்பிட்டு, படுகையின் மொத்த நீரினையும், படுகை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துவிட்டதால், காவிரிப்படுகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவோ, கூடுதலாக நீரை பயன்படுத்தவோ இயலாது. காவிரிப் பிரச்சினை தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களின் உணர்வுபூர்வமான பிரச்சினையாகும். ஆதலால், கர்நாடக அரசு மேகதாதுவிலோ அல்லது காவிரிப்படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தை, பிற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், ஒன்றிய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசினை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது."

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்

மாண்புமிகு திரு. மு. ரவிசங்கர், பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கீழ்க்காணுமாறு முன்மொழிவார்:

"ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

'2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18–ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'."

## அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

& 1. 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகளுக்குப் பதிலிட்டகற்றீடாக, 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகளை இயற்றியது குறித்து இயற்கை வளங்கள் (எம்.எம்.டி.1) துறையின் 16.12.2025–ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.84–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1957–ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மாற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 28(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

& 2. 2023–2024–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொண்ணூற்று ஐந்தாவது ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டம் 323(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

# 1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ்–ஆங்கிலம்)

$ 2. 2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18–ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ‘‘ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை’’. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

& 3. தமிழ்நாட்டின் நிதி மேலாண்மை குறித்த வெள்ளை அறிக்கை – பொது நிதி குறித்த ஓர் ஆய்வு, 2021–2022 முதல் 2025–2026 வரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

**இரா. சாந்தி,**
**செயலாளர்.**

# 17.6.2026 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

$ 18.6.2026 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

& 19.6.2026 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும்.